# சென்னை மாகாண 3-வது

# தமிழர் மகாநாடு.

**1937, டிசம்பர், 26-உ ஞாயிற்றுக்கிழமை திருச்சிராப்பள்ளி முனிசிபல் பப்ளிக் ஹாலில் நடைபெறும்.**

---

அன்று காலை 8மணி முதல் 9 வரை நகரத்தின் தெற்குக்கோட்டை வாசலாகிய மணிக்கூண்டிலிருந்து வடக்குக் கோட்டை வாசல் வழியாக மகாநாட்டுக் கொட்டகை வரை ஹிந்தி கட்டாயப் படிப்பை எதிர்க்கும் அறிகுறியாக மாகாண முழுதுமுள்ள மக்கள் அடங்கிய ஒரு பெரிய ஊர்வலம் நடைபெறும்.

மகாநாட்டுத் தலைவர்.

**தோழர் S.S. சோமசுந்தரபாரதியார் அவர்கள்**
M. A., B. L; பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்,
அண்ணாமலை நகர்.

திறப்பாளர்.

திருநெல்வேலி டாக்கூர்லா லெக்ச்சரர்
**தோழர் கா. சுப்பிரமணிய பிள்ளை**
M. A. M. L. அவர்கள்.

வரவேற்புக் கழகத்தலைவர்

**ராவ்சாகிப் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை**
அவர்கள் B. A., B. L, கரந்தை தமிழ்ச் சங்கத் தலைவர்
தஞ்சாவூர்.

தொண்டர் படைத் தலைவர்

**தோழர் வித்துவான் தேவநேயப் பாவாணர்**
அவர்கள், புத்தூர் திருச்சி.

தென்னிந்தியா முழுதுமுள்ள பொது இயக்கத் தலைவர்களான தோழர்கள் ஈரோடு ஈ. வே. ராமசாமி பெரியார், தஞ்சாவூர் ஏ. டி. பன்னீர் செல்வம், அகில இந்திய ஸ்ரீ வைஷ்ணவ சேவா சங்கத்தலைவர் ஸ்ரீ காஞ்சி பரவஸ்து ராஜகோபாலாச்சார்ய சுவாமிகள் ஆகியவர்களும், தமிழ்ச் சங்கத் தலைவர்களும், தமிழ்ப் பேராசிரியர்களும், தமிழ்ப் பெருமக்களும் மகாநாட்டிற் கலந்துகொள்ளுவார்கள்.

கொட்டகையில் ஒலி பெருக்கிக் கருவிகள் அமைக்கப் பெறுகிறது.

பிரதிநிதிகளுக்கும், வரவேற்பு அங்கத்தினர்களுக்கும், மட்டும் உணவு வசதி, தங்குமிடம் முதலியவைகள் ஏற்பாடு செய்யப் பெற்றிருக்கிறது. மகாநாட்டின் டிக்கட்டுகள் கொட்டகையின் வாசற் படியில் மட்டுமே கிடைக்கும்.

வெளி ஜில்லா பிரதிநிதிகள் தங்கள் ஊரிலிருந்து வருகிறவர்களை முன்னதாகத் தெரிவித்து காரியதரிசியிடம் மொத்தமாக டிக்கட்டுகளைப் பெற்றுக் கொள்ளுவது நல்லது.

பிரதிநிதிகள் தங்குவதற்கு முனிசிபல் சத்திரத்திலும், எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் கட்டிடத்திலும் வசதி செய்யப் பெற்றிருக்கிறது. திருச்சி ஜங்ஷனிலிருந்து இவ்விடங்களுக்கு நேராக பஸ் வருகிறது. இக் கட்டிடங்களிரண்டும் வெகு சமீபத்திலிருக்கின்றன.

**வரவேற்பு அங்கத்தினர் 2-0-0, பிரதிநிதிகள் 0-8-0.**
**பார்வையாளர் 0-4-0**

**கி. ஆ. பெ. விசுவநாதம்,**
அமைச்சர், திருச்சிராப்பள்ளி.